நலம் மற்றும் சத்துணவு திட்டம்" என்ற பெயரில், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் இரண்டாவது பகுதியாக செயல்படுத்துவதற்கு உலக வங்கியிடம் இருந்து உதவி பெறுவது சம்பந்தமான கருத்துரு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கருத்துரு தயாரிக்கப்பட்டபின், அக்கருத்துரு உலக வங்கிக்கு அனுப்புவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே உலக வங்கி 27 கோடி ரூபாய் தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீதத் தொகை எந்த வகையிலே தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்றும், ஏனைய மாவட்டங்களுக்கு இந்த திட்டம் எப்போது மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. தற்போது இந்தத் திட்டம் 31—3—1988 வரை நீட்டிக்க இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆணை விரைவில் வெளியிட உள்ளது. அதற்குப் பிறகு ஒருங்கிணைந்த குழந்தைகள் நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் செயல்படும்.

திரு. ஜே. முகம்மது கனி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 31—3—1988-க்குப் பின்னாலே அந்தத் திட்டம் அதே பணியாளர்களை வைத்து செயற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதே பணியாளர்களைக் கொண்டுதான் அந்தப் பணி செயலாற்றப்படும்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

THIRU T. VENKATA REDDI: Mr. Deputy Speaker, Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee:

(1) Fifty-sixth Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to Commercial Taxes and Religious Endowments Department in the Report of the Comptroller and Auditor-General of India for the year 1982-83 (Revenue Receipts);

(2) Fifty-seventh Report of the Committee on Public Accounts on paragraph 3.1 pertaining to Public (Chief Minister's Nutritious Meals Programme) Department in the Report of the Comptroller and Auditor-General of India for the year 1983-84 (Civil).

(ஆ) மனுக்கள் குழு.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள், குடிசைப்பகுதிகள், நடைபாதையில் அமைந்திருக்கும் குடிசைகளிலுள்ள மக்களுக்காக அடிப்படை தேவைகளை பெருக்கக் கோரி பெண்ணுரிமை இயக்கத்தினரிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீதான—குழுவின் இரண்டாம் அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

6. வரவு செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,79,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயில் பகுதிகளில் உள்ள கஞ்சங் கொல்லை கொண்டாயிருப்பு போன்ற பல கிராமங்களுக்கு பேருந்து வசதி இல்லாமல் மக்கள் அவதிப்படுவதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."